DINAKARAN

29 APR 2022

PAGE 6

புதுவை பல்கலைக்கழகம் சார்பில்

# போதை பொருள் தடுப்பு பயிற்சி பட்டறை

## மே 5, 6 தேதிகளில் நடக்கிறது

புதுச்சேரி, ஏப். 29: மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்துடன் இணைந்து, புதுவை பல்கலைக்கழகத்தின் சமூகப்பணித்துறை 'போதையில்லா புதுச்சேரி மாவட்டத்தை நோக்கி' என்ற பயிற்சி முகாமை நடத்தவுள்ளது. இதுதொடர்பாக திட்ட இயக்குநர் மற்றும் சமூக பணித்துறை பேராசிரியர் நளினி மற்றும் டாக்டர் இப்திகர் ஆலம் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

போதை பொருள் பயன்பாட்டினைத் தடுத்தல் என்ற தலைப்பில் மே 5, 6 ஆகிய தேதிகளில் பயிற்சி பட்டறை நடைபெற உள்ளது. இதில் புதுவை பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகளில் உள்ள துணை பேராசிரியர்கள் கலந்து கொள்ளலாம். போதைப் பொருள் பயன்பாட்டின் பல்வேறு தீய அம்சங்கள் மற்றும் மாணவர்களின் வாழ்வில் அதன் தாக்கம் குறித்து பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி அதிகாரிகள், பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

பேராசிரியர்களுக்கு ஊக்கமூட்டும் மேம்பாட்டு ஆலோசனை, உளவியல் ஆதரவு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படும். குடும்பங்களில் போதைத்தடுப்பு முயற்சிகளை மேற்கொண்டு, அதனால் மாணவர்களுக்கு ஏற்படும் ஆபத்துகளை கண்டறிந்து ஆலோசனை வழங்குதல் மற்றும் ஆசிரியர்களுடன் மாணவர் சமூக ஆதரவு மன்றங்களை உருவாக்குதல் குறித்தும் பயிற்சியில் ஆலோசைனகள் வழங்கப்படும்.

ஆர்வமுள்ள பேராசிரியர்கள், *https://FORMS.GLE/GGASRKJ8UG9HFUVZ7* அல்லது *drugfreepuducherry@gmail.com* என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது விருப்பத்தை அனுப்பி பெயர்களை பதிவுச்செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

THE HINDU

29 APR 2022

PAGE 5

# University takes up project for drug-free Puducherry

## It is a Ministry of Social Justice and Empowerment initiative

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

The Department of Social Work, Pondicherry University, in association with the Ministry of Social Justice and Empowerment (MoSJE), Government of India, has undertaken 'Drug-free Puducherry District' - a community-based project under the Ministry's Nasha Mukt Bharat Abhiyaan campaign.

As part of the project, two workshops are planned on May 5 and 6 to train the interested faculty members from Pondicherry University and its affiliated colleges on 'Prevention of Substance Abuse among Youth', said a press note from R. Nalini, principal investigator and Iftekhar Alam, Assistant Professor and co-principal investigator, Department of Social Work, Pondicherry University.

The primary aim is to sensitise the university and college authorities, principals and faculty to various risks from drug use and its impact on students' lives; to train faculty members in motivation enhancement counselling, psychosocial support and family education to identify and counsel at-risk students.

The project will also create student social support forums with faculty mentors to prevent substance use and serve as role models for positive behaviour change. Interested faculty members, are requested to register using the designated online form or email to drugfreepuducherry@gmail.com. Registration is free and that all participants shall be provided training completion certificates, the University said.

DINAKARAN

29 APR 2022

PAGE 7

# பல்கலை. வளாகத்தில் போராட்டம் நடத்த தடை

புதுச்சேரி, ஏப். 29:

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் போராட்டம் நடத்த திடீர் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து புதுச்சேரி பல்கலைக்கழக பதிவாளர் அனைத்து துறைகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கை:-

புதுச்சேரி பல்கலைக்கழக வளாகத்தில் நலச்சங்கங்கள் போராட்டம் நடத்தவோ, கூட்டங்கள் நடத்தவோ கூடாது என ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தில் அமைதியான சூழலை குலைக்கும் வகையில் முன் அனுமதி இல்லாமல் போராட்டம், கூட்டம் நடத்த தடை விதிக்கப்படுகிறது. இதனை மீறினால் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

DINAMANI

29 APR 2022

PAGE 5



# புதுச்சேரி மத்திய பல்கலை.யில் போராட்டம் நடத்தத் தடை

**புதுச்சேரி, ஏப். 28:** புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழக வளாகத்தில் போராட்டம் நடத்தத் தடை விதிக்கப்பட்டது.

இதுகுறித்து புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ) அமரேஷ் சமந்தரேயா பல்கலைக்கழகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் அனுப்பிய சுற்றறிக்கை:

பல்கலைக்கழக வளாகத்துக்குள் ஊழியர் சங்கங்கள் உரிய அனுமதியின்றி போராட்டம், வாயில் கூட்டம் அல்லது ஒன்றுகூடுதல் கூடாது. பல்கலைக்கழகத்தின் அமைதியான சூழலை குலைக்கும் வகையில் முன் அனுமதியின்றி போராட்டம், கூட்டம் நடத்த தடை விதிக்கப்படுகிறது. மீறினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என அதில் கூறப்பட்டுள்ளது.

DINAKARAN

29 APR 2022

PAGE 6

புதுவை பல்கலைக்கழகம் சார்பில்

# போதை பொருள் தடுப்பு பயிற்சி பட்டறை

## மே 5, 6 தேதிகளில் நடக்கிறது

புதுச்சேரி, ஏப். 29: மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்துடன் இணைந்து, புதுவை பல்கலைக்கழகத்தின் சமூகப்பணித்துறை 'போதையில்லா புதுச்சேரி மாவட்டத்தை நோக்கி' என்ற பயிற்சி முகாமை நடத்தவுள்ளது. இதுதொடர்பாக திட்ட இயக்குநர் மற்றும் சமூக பணித்துறை பேராசிரியர் நளினி மற்றும் டாக்டர் இப்திகர் ஆலம் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

போதை பொருள் பயன்பாட்டினைத் தடுத்தல் என்ற தலைப்பில் மே 5, 6 ஆகிய தேதிகளில் பயிற்சி பட்டறை நடைபெற உள்ளது. இதில் புதுவை பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகளில் உள்ள துணை பேராசிரியர்கள் கலந்து கொள்ளலாம். போதைப் பொருள் பயன்பாட்டின் பல்வேறு தீய அம்சங்கள் மற்றும் மாணவர்களின் வாழ்வில் அதன் தாக்கம் குறித்து பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி அதிகாரிகள், பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

பேராசிரியர்களுக்கு ஊக்கமூட்டும் மேம்பாட்டு ஆலோசனை, உளவியல் ஆதரவு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படும். குடும்பங்களில் போதைத்தடுப்பு முயற்சிகளை மேற்கொண்டு, அதனால் மாணவர்களுக்கு ஏற்படும் ஆபத்துகளை கண்டறிந்து ஆலோசனை வழங்குதல் மற்றும் ஆசிரியர்களுடன் மாணவர் சமூக ஆதரவு மன்றங்களை உருவாக்குதல் குறித்தும் பயிற்சியில் ஆலோசைனகள் வழங்கப்படும்.

ஆர்வமுள்ள பேராசிரியர்கள், *https://FORMS.GLE/GGASRKJ8UG9HFUVZ7* அல்லது *drugfreepuducherry@gmail.com* என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது விருப்பத்தை அனுப்பி பெயர்களை பதிவுச்செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.